# ஆண் தேவதைகளும் பெண் தெய்வங்களும்!

## வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்! 3

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

ஒரு மேடை நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மைக்கில் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் அந்த நிகழ்ச்சிக்கு ஒரு பெண்மணியை சிறப்புப் பேச்சாளராக அழைத்தாராம். அதற்கு அந்தப் பெண்மணி, ‘வீட்டில் கேட்டுச் சொல்கிறேன்’ என்று சொன்னாராம்.

‘‘இப்படித்தான் பெண்கள் தங்கள் முடிவை தாங்கள் எடுக்காமல் ‘வீட்டில் கேட்டுச் சொல்கிறேன்’, ‘கணவரிடம் கேட்டுச் சொல்கிறேன்’ என்று தங்கள் சுதந்திரத்தை மற்றவர்கள் கைகளில் ஒப்படைத்துவிட்டு அடிமையாக இருக்கிறார்கள்’’ என்று பேசிக்கொண்டே போனார்.

ஒரு நிகழ்ச்சிக்கு அழைக்கும்போது அன்றைய தேதியில் வீட்டில் ஏதேனும் முக்கிய நிகழ்வுகள் இருக்கலாம், வீட்டுப் பெரியவர்களுக்கு ஹாஸ்பிடல் அப்பாயின்மென்ட் இருக்கலாம், அல்லது பிள்ளைகள் பள்ளியில் ஏதேனும் நிகழ்ச்சி இருக்கலாம். இப்படி ஒவ்வொருவருக்கும் ஏதேனும் கமிட்மென்ட் இருக்கலாம். அவற்றை எல்லாம் கவனத்தில் கொண்ட பிறகுதானே நிகழ்ச்சிக்கு வர முடியும்! இப்படி எல்லா விஷயங்களுக்கும் ‘பெண்ணிய முலாம்’ பூசுவதால்தான் பெண்களின் நியாயமான உணர்வுகள்கூட பல நேரங்களில் கேலிக்கூத்தாகி விடுகின்றன.

இந்த இடத்தில் ஆண்களாக இருந்தாலும், ‘யோசித்துச் சொல்கிறேன்’ என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் குடும்பத்தில் இருக்கும் மனிதர்களுக்கான இலக்கணம்.

இந்த இலக்கணத்தை ‘காற்றின் மொழி’ திரைப்படத்தில் மிக அழகாகச் சொல்லி இருப்பார்கள்.

நாயகி +2 தோல்வி. வேலைக்குச் சென்ற அனுபவமே இல்லை. சமயோசிதமாகப் பேசுவதும், மிமிக்ரி செய்வதும் நாயகியின் இயல்பு. அந்த இயல்பை வைத்தே ரேடியோவில் ஆர்.ஜெ வேலையில் சேர்கிறாள்.



இரவு நேரப் பணி. அந்தரங்கப் பிரச்னைகளைச் சொல்லி யோசனை கேட்பவர்களுக்கு போனில் பதில் சொல்லும் நிகழ்ச்சி. ஆண்கள் பலர் ஏடாகூடமான கேள்விகளைக் கேட்க, நாயகி சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பதில் சொல்லி அவர்கள் மனமாற்றத்துக்கு உதவுவதாகக் கதை செல்கிறது. இந்த நிகழ்ச்சி குறுகிய நாட்களிலேயே பெரும் வரவேற்பைப் பெற்று, விருதுக்கும் தயாராகிறது.

‘இரவு நேரப் பணிக்குச் செல்ல வேண்டாம்’ என அக்காக்களும், அப்பாவும் அறிவுரை சொல்ல, அதை அவள் மறுக்க ‘‘ஏதாவது பிரச்னைன்னா எங்ககிட்டதானே வந்து நிற்பாய்’’ என அவர்கள் கண்டிப்புடன் பேசும்போது நாயகி சொல்லும் பதில் கிளாசிக்.

‘‘ஆமாம். நீங்கதானே என்னுடைய ஃபேமிலி. உங்ககிட்டதான் வந்து நிற்பேன்!’’

பொதுவாக என்ன சொல்லுவார்கள்? ‘‘நான் ஏன் உங்ககிட்ட வரப்போறேன்? செத்தாலும் உங்ககிட்ட வந்து நிக்க மாட்டேன்!’’ என்பதுதான் வழக்கமான பதிலாக இருக்கும். ஆனால் இந்தப் படத்தில் நாயகி சொல்லும் இந்த பதிலில் குடும்ப அமைப்புக்கான அஸ்திவார நம்பிக்கை பொதிந்துள்ளது.

உச்சம் தொடும்வரை எல்லாவிதமான இடர்களையும் தாண்டி பயணிப்பவர்கள் மட்டுமே இந்த வாழ்வின் முழு பரிமாணத்தையும் உணர முடியும். அதற்கு இதோ நம் கண் முன்னே ஒரு ரோல் மாடல் ‘தங்க மங்கை’ கோமதி.

திருச்சி அருகேயுள்ள முடிகண்டம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களான மாரிமுத்து–ராசாத்தி தம்பதியினரின் மகள்தான் கோமதி. அதிகாலை 3 மணிக்கு எழுந்து மகளை தயார் செய்து ஐந்து கிலோமீட்டர் தூரம் சைக்கிளில் வைத்து ஓட்டிக்கொண்டு வந்து மெயின் ரோட்டில் விடுவார் தந்தை. அங்கிருந்து பஸ்ஸில் கோமதி கல்லூரி மைதானத்திற்கு காலை 4 மணிக்கு வந்துவிடுவார். கடுமையான பயிற்சி. அங்கு பயிற்சி முடிந்து கல்லூரி. பிறகு மாலையில் மீண்டும் பயிற்சி. வீடு திரும்பும் நேரத்தில் சைக்கிளோடு வந்து காத்திருந்து இவரது தந்தை அழைத்துச் செல்வார்.



விளையாட்டில் இவரது பங்களிப்பினால் இவருக்கு பெங்களூருவில் மத்திய அரசின் வருமானவரித் துறையில் வேலை கிடைத்தது. தோகா நாட்டின் கத்தார் நகரில் நடைபெற்ற ஆசிய தடகளப் போட்டியில் பெண்களுக்கான 800 மீட்டர் பிரிவில் முதலாவதாக வந்து தங்கம் வென்று தனது தோளில் தேசத்தின் கொடியை ஏந்தி வலம் வந்தவர் கண்களில் மட்டும் கண்ணீர். காரணம், இந்த வெற்றியைப் பார்க்க இவரின் தந்தை இப்போது உயிருடன் இல்லை.



அப்பாவின் மறைவுக்குப் பிறகு இவருக்கு உதவியவர், இவரின் அக்கா. யாரிடம் பேசி எப்படி போட்டிக்குள் நுழைவது உள்ளிட்ட அனைத்தையும் அவர்தான் பார்த்துக்கொண்டாராம்.

இந்த செய்தி அமீர் கான் நடித்த ‘தங்கல்’ திரைப்படத்தை நினைவுபடுத்தியது. தங்கள் குழந்தைகளுக்கு அப்பா கொடுக்கும் தைரியம்தான் எத்தனை வலிமையானது?

மல்யுத்த வீரராக இருந்த அமீர்கான் குடும்பச் சூழல் காரணமாக அந்தத்துறையில் ஜொலிக்க முடியாமல் போய்விட, தன் மல்யுத்தக் கனவை தன் பெண் குழந்தைகள் மூலம் நிறைவேற்றிக்கொள்ள நினைக்கிறார். அவர்களுக்குப் பயிற்சி அளித்து, இந்தியாவுக்காக சர்வதேச மல்யுத்தப் போட்டியில் தன் மூத்த மகளை தங்கம் வெல்ல வைக்கிறார். (மகாவீர் சிங் போகட் என்பவரின் நிஜக்கதை அது. அவரின் மகள்கள் கீதா போகட் மற்றும் பபிதா குமாரி ஆகியோர் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்காக பதக்கங்களைக் குவித்த வீரப்பெண்கள்.)

பயிற்சிக் காலத்தில் அமீர் கான் மகள் தண்ணீருக்குள் தத்தளிக்கும்போது அவர் சொல்லும் வார்த்தைகள் எல்லா பெண்களுக்கும் அவர்களின் அப்பா சொல்வதைப் போல அமைந்திருந்தது. ‘‘உனக்கு அப்பாவால் கற்றுக்கொடுக்க மட்டுமே முடியும். ஒவ்வொரு முறையும் அப்பா உன்னைக் காப்பாற்ற வர முடியாது. நீதான் போராடணும்!’’

‘‘விளையாட்டில் எதிராளியின் மூளையைக் குழப்பி விளையாடணும். போக்கு காட்டுவது ஒன்றாகவும், நிஜத்தில் செய்வது வேறொன்றாகவும் இருக்கணும்!’’

கோமதியின் வெற்றியும், அந்த மல்யுத்தப் பெண்களின் வெற்றியும் கொண்டாடப்பட வேண்டியவைதான். மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஒருவரின் இமாலய வெற்றிக்கு, அவரின் உழைப்பு, திறமை ஆகியவற்றைத் தாண்டி அவர்கள் வீட்டில் உள்ள ஆண் தேவதைகள் மற்றும் பெண் காவல் தெய்வங்களின் தியாகங்களும் மாபெரும் காரணம் என்பதை மறக்கக்கூடாது.

வெற்றியைக் கொண்டாடும் அதே நேரம் பெற்றோரையும் உடன்பிறந்தவர்களையும் வணங்குவோம். ●

### இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!

ஒருவரின் இமாலய வெற்றிக்கு, அவரின் உழைப்பு, திறமை ஆகியவற்றைத் தாண்டி அவர்கள் வீட்டில் உள்ள ஆண் தேவதைகள் மற்றும் பெண் காவல் தெய்வங்களின் தியாகங்களும் மாபெரும் காரணம். எனவே, குடும்பங்களையும் கொண்டாடுவோம்.

காம்கேர் கே.புவனேஸ்வரி

